جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

தொகுப்பாளர் : அஷ்ஷைக் அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும் 01 முறை (ஸய்யிதுல் இஸ்திஃபாஃர்)**

اللَّهُمَّ أَنْتَ رَبِّي لَا إِلَهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ
وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوذُ بِكَ مِنْ
شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ لَكَ بِذَنْبِي
فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

**‘அல்லாஹு‍ம்ம அன்த ரப்பீ லா இலாஹ இல்லா அன்த கலக்தனீ வஅன அப்துக வஅன அலா அஹ்திக வவஃதிக மஸ்ததஃது அஊது பிக மின் ஷர்ரி மா ஸனஃது அபுஉ லக பினிஃமதிக அலய்ய வஅபுஉ பிதன்பீ ஃபஃபிர்ளீ ஃபஇன்னஹு லா யஃபிஃருத்துனூப இல்லா அன்த.’**

பொருள்: “அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை. ’எவர் இதை மாலையில் உறுதியான நம்பிக்கையுடன் ஓதி அன்றைய இரவில் மரணித்தால் அவர் சுவர்க்கம் நுழைந்து விட்டார். காலையில் உறுதியான நம்பிக்கையுடன் ஓதி மாலையில் மரணித்தாலும் அதே கூலியாகும்.’

[அறிவிப்பவர்: ஷத்தாத் பின் அவ்ஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், புஹாரி 6306]

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும் 1 முறை:**

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلَّهِ وَالْحَمْدُ لِلَّهِ، لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، رَبِّ أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذَا الْيَوْمِ وَخَيْرَ مَا بَعْدَهُ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ هَذَا الْيَوْمِ وَشَرِّ مَا بَعْدَهُ، رَبِّ أَعُوذُ بِكَ مِنَ الْكَسَلِ وَسُوءِ الْكِبَرِ، رَبِّ أَعُوذُ بِكَ مِنْ عَذَابٍ فِي النَّارِ وَعَذَابٍ فِي الْقَبْرِ

**“அஸ்பஹ்னா வஅஸ்பஹல் முல்கு லில்லாஹ், வல்ஹம்து லில்லாஹ், லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர். ரப்பி அஸ்அலுக கைர மாஃபீ ஹாதல் யவ்மி, வகைர மா பஃதஹு வஊது பிக மின் ஷர்ரி மாஃபீ ஹாதல் யவ்மி வஷர்ரி மாபஃதஹு, ரப்பி அஊது பிக மினல் கஸலி வ ஸூஇல் கிபரி, ரப்பி அஊது பிக மின் அதாபின்னாரி, வ அதாபின் ஃபில் கப்ரி”.**

பொருள்: (அல்லாஹ்வின் கிருபையினால்) நாம் காலைப் பொழுதை அடைந்து விட்டோம், ஆட்சியும் அல்லாஹ்வுககே ஆகிவிட்டது, புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே! வணங்கப்படுபவன் அல்லாஹ்வைத் தவிர (வேறு) இல்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்னல; அவனுக்கே ஆட்சி உரியது; அவனுக்கே எல்லா புகழும் உரியது, அவனே ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்; என் இரட்சகா! இந்நாளின் நன்னம மற்றும் இந் நாளை)ற்கு பிறகுள்ள நன்மையை உன்னிடம் நான் கேட்கறேன்; இன்னும், இந்நாளில் ஏற்படும் தீமை மற்றும் இந்நாளை)ற்கு பிறகுள்ள தீமையிலிருந்து உன்னைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன்; என் இரட்சகா! சோம்பல் மற்றும் வயது முதுமையின் தீமையிலிருந்து உன்னைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன்; என் இரட்சகா! நரகத்தில் உள்ள வேதனை மற்றும் கப்ரில் உள்ள வேதனையிலிருந்து உன்னைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன்.

[அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், முஸ்லிம் 7083]

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**மாலையில்:**

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلَّهِ

"அஸ்பஹ்னா வஅஸ்பஹல் முல்கு லில்லாஹி"

என்பதற்கு பதிலாக

أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلَّهِ

"அம்ஸைனா வஅம்ஸல் முல்கு லில்லாஹி".

رَبِّ أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذَا الْيَوْمِ وَخَيْرَ مَا بَعْدَهُ ،

وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ هَذَا الْيَوْمِ وَشَرِّ مَا بَعْدَهُ

"ரப்பி அஸ்அலுக கைர மாஃபீ ஹாதல் யவ்மி, வகைர மா பஃதஹு
வஊது பிக மின் ஷர்ரி மாஃபீ ஹாதல் யவ்மி வஷர்ரி மாபஃதஹு"

என்பதற்கு பதிலாக

رَبِّ أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَخَيْرَ مَا بَعْدَهَا

وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَشَرِّ مَا بَعْدَهَا

"ரப்பி அஸ்அலுக கைர மாஃபீ ஹாதிஹில் லைலதி,
வகைர மா பஃதஹா, வஊது பிக மின் ஷர்ரி மாஃபீ ஹாதிஹில்
லைலதி வஷர்ரி மாபஃதஹா".

என்று கூற வேண்டும்.

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும் 1 முறை:**

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْو وَالْعَافِيَةَ فِي دِينِي وَدُنْيَايَ وَأَهْلِي وَمَالِي اللَّهُمَّ اسْتُرْ عَوْرَاتِي وَآمِنْ رَوْعَاتِي اللَّهُمَّ احْفَظْنِي مِنْ بَيْنِ يَدَيَّ وَمِنْ خَلْفِي وَعَنْ يَمِينِي وَعَنْ شِمَالِي وَمِنْ فَوْقِي وَأَعُوذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِي

**“அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் அஃப்வ வல் ஆஃபியத ஃபித் துன்யா வல் ஆகிரா, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் அஃப்வ வல் ஆஃபியத ஃபீ தீனீ, வதுன்யாய, வஅஹ்லீ, வமாலீ, அல்லாஹும்மஸ்துர் அவ்ராதீ, வஆமின் ரவ்ஆதீ, அல்லாஹும்மஹ் ஃபிழ்னீ மின் பைனி யதய்ய, வமின் கல்ஃபீ, வஅன் யமீனீ, வஅன் ஷிமாலீ, வமின் ஃபவ்கீ, வஊது பிஅழமதிக அன் உஃதால மின் தஹ்தீ”.**

பொருள்: யா அல்லாஹ்! இம்மை மற்றும் மறுமையின் மன்னிப்பு, சுகம் ஆகியவற்றை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் என் மார்க்கம், என் இவ்வுலக வாழ்வு, என் குடும்பம், என் செல்வம் ஆகியவற்றில் மன்னிப்பையும், சுகத்தையும் கேட்கிறேன். யா அல்லாஹ்! என் குறையை மறைப்பாயாக, என் திடுக்கங்களிலிருந்து அபயம் அளிப்பாயாக. யா அல்லாஹ்! எனக்கு முன்னால், எனக்குப் பின்னால் என் வலப்பக்கம், என் இடப் பக்கம், எனக்கு மேலிருந்து, கீழிருந்து பாதுகாப்பளிப்பாயாக. உன்னுடைய மகத்துவத்தைக் கொண்டு எனக்கு கீழ் இருந்து நான் தாக்கப்படுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அபூதாவுத் 5076, இப்னு மாஜாஹ் 3871)

# காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும், இரவில் தூங்கச் செல்லும் போதும் 1 முறை:**

اللّهُمّ عالِمَ الغَيْبِ وَالشّهادَةِ فاطِرَ السّماواتِ وَالأَرْض رَبّ كلّ شَيءٍ وَمَلِيْكَه، أَشْهَدُ أَنْ لا إِلهَ إِلاّ أَنْت، أَعوذُ بِكَ مِن شَرِّ نَفْسِي وَمِن شَرِّ الشّيْطانِ وَشِرْكِه، وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوءاً أَوْ أَجُرَّهُ إِلى مُسْلِم

**"அல்லாஹும்ம ஆலிமல் கஃய்பி வஷ்ஷஹாததி ஃபாதிரஸ் ஸமாவாதி வல் அர்ழி ரப்ப குல்லி ஷய்இன் வமலீகஹு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த, அஊது பிக மின் ஷர்ரி நஃப்ஸீ வமின் ஷர்ரிஷ் ஷைதானி வஷிர்கிஹி வஅன் அக்தரிஃபு அலாநஃப்ஸீ ஸூஅன் அவ் அஜுர்ரஹு இலா முஸ்லிமின்".**

பொருள்: மறைவானவை, மறைவில்லாதவை யாவையும் அறிந்த நாயனே! வானங்கள் மற்றும் பூமியைப் படைத்தவன்! ஒவ்வொரு பொருளின் இரட்சகன். மற்றும் அவற்றின் உரிமையாளன். வணங்கப்படுபவன் உன்னையன்றி வேறு கடவுள் இல்லை என நான் சாட்சி கூறுகின்றேன். என் மனதின் தீமையிலிருந்து, ஷைத்தானின் தீமை மற்றும் அவன் கூட்டாகுதல் ஆகியவற்றிலிருந்து, இன்னும் எனக்கே நான் தீமை செய்வதிலிருந்து அல்லது எந்த ஒரு முஸ்லிமுக்காவது நான் அதை இழுத்துச் செல்லுதலிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். ஆதாரம்: திர்மிதீ 2392, அபூதாவூத் 5069).

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும் 01 முறை:**

اللّهُمّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ
نَحْيَا وَبِكَ نَمُوتُ وَإِلَيْكَ النّشُورُ ترمذي

**"அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா வபிக அம்ஸைனா வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகந் நுஷூர்".**

**மாலையில் கீழுள்ளது போன்று கூற வேண்டும்:**

اللّهُمّ بِكَ أَمْسَيْنَا وَبِكَ أَصْبَحْنَا
وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوتُ وَإِلَيْكَ الْمَصِيرُ

**"அல்லாஹும்ம பிக அம்ஸைனா வபிக அஸ்பஹ்னா வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகல் மஸீர்"**

பொருள்: யா அல்லாஹ்! உன்னைக் கொண்டே நாங்கள் காலைப் பொழுதை அடைந்தோம். உன்னைக் கொண்டே மாலைப் பொழுதை அடைவோம். உன்னைக் கொண்டே உயிர் பெற்றோம், உன்னைக் கொண்டே இறப்பெய்துவோம். உன்பாலே (மரணத்தின் பின்) எழும்பி வருதலும் உண்டு.

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

### காலையிலும், மாலையிலும் 01 முறை:

أَصْبَحْنَا عَلَى فِطْرَةِ الإِسْلاَمِ وَعَلَى كَلِمَةِ الإِخْلاَصِ، وَعَلَى دِيْنِ نَبِيِّنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَعَلَى مِلَّةِ أَبِينَا إِبْرَاهِيمَ حَنِيفًا مُسْلِمًا، وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ

**“அஸ்பஹ்னா அலா ஃபித்ரதில் இஸ்லாமி, வஅலா கலிமதில் இக்லாஸி, வஅலா தீனி நபிய்யினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், வஅலா மில்லதி அபீனா இப்ராஹீம ஹனீஃபன் முஸ்லிமன் வமா கான மினல் முஷ்ரிகீன்”.**

பொருள்: இஸ்லாமிய மார்க்கத்தின் மீது, தூய்மையான கலிமாவின் மீது, நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தின் மீது, நம் தந்தை இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய மார்க்கத்தின் மீது அவை அனைத்தின் மீதும் நாங்கள் காலைப் பொழுதை அடைந்து விட்டோம். (அசத்தியமான மதங்களை விட்டும் நீங்கி சத்தியத்தின் பால்) சாய்ந்தவராக முஸ்லிமாக முற்றிலும் தன்னை அல்லாஹ்விடம் ஒப்படைத்தவராக (இருந்தார்). இன்னும் இணை வைத்துக்கொண்டிருந்தோரில் அவர் இருக்கவில்லை.

(அறிவிப்பவர்: ஸஊத் இப்னு அபீ அப்ஸா (ரலி) அவர்கள், முஸ்னத் அஹ்மத் 15401)

# காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

## மாலையில் 01 முறை:

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

**“அஊது பிகலிமாதில்லாஹித்தாம்மாதி மின் ஷர்ரி மா கலக்”**

பொருள்: அல்லாஹ்வின் நிறைவான வாக்குகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன். (ஒரு முறை) நபி(ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, ‘அல்லாஹ்வின் தூதரே! நேற்றிரவு என்னைத் தேள் ஒன்று கொட்டிவிட்டது. அதனால் நான் (நிம்மதியான தூக்கத்தை) இழந்துவிட்டேன்‘ என்று கூறினார். அதற்கு நபி(ﷺ) அவர்கள், ‘நீ மாலைப் பொழுதை அடையும்போது இதைக் கூறியிருந்தால் அது உனக்குத் தீங்கிழைத்திருக்காது‘ என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர்: அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், முஸ்லிம் 5248).

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

### ஒரு நாளைக்கு 100 முறை:

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ

وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

**"லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்"**

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை, அவன் ஏகன், அவனுக்கு இணையில்லை, அவனுக்கே ஆட்சி சொந்தம், அவனுக்கே புகழ் சொந்தம், அவன் யாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன். 'எவர் இதை 100 முறை கூறி வருவாரோ அவருக்கு பத்து அடிமைகளை உரிமையிட்ட நன்மை, 100 நன்மைகள் பதியப்பட்டு, 100 பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அன்றைய மாலை வரை ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்பு, இவர் கொண்டு வந்ததை விட மிகச் சிறந்ததை எந்த ஒருவரும் கொண்டு வர மாட்டார். (ஆனால்) அவர் கூறியதைப் போன்று கூறியவரோ, அல்லது அதை விட அதிகமாகக் கூறியவரையோ தவிர'.

(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், புஹாரி 6403)

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

### காலையிலும், மாலையிலும் 10 முறை:

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

**"லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்"**

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை, அவன் ஏகன், அவனுக்கு இணையில்லை, அவனுக்கே ஆட்சி சொந்தம், அவனுக்கே புகழ் சொந்தம், அவன் யாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' யார் காலையில் 'லாயிலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்க்கு, வலஹுல் ஹம்து. வஹ்வ அலா குல்லி ஷையின் கதீர் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. அவனுக்கு புகழ் அனைத்தும் உரியது. அவன் எல்லாவற்றின் மீதும் வலிமையுள்ளவன்)' என பத்து முறைக் கூறுவாரோ, அவர் கூறிய ஒவ்வொன்றுக்கும் 10 நன்மைகளை அல்லாஹ் பதிவு செய்கிறான், 10 பாவங்களை மன்னிக்கிறான், 10 அந்தஸ்துகளை உயர்த்துகிறான், 10 அடிமைகளை உரிமையிட்ட நன்மை, காலையிலிருந்து மாலை வரை (ஷைத்தானிலிருந்து) பாதுகாப்பு, அத்தினத்தில் அந்த அமலை பால்படுத்தும் செயலை செய்ய மாட்டார், மாலையில் கூறும் போதும் இதே சிறப்பு அவருக்கு உண்டு.

அறிவிப்பவர்: அபூ அய்யூபுல் அன்ஸாரி (ரலி) அவர்கள், அஹ்மத் 23614)

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையிலும், மாலையிலும் 100 முறை:**

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهِ

**“ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி”**

பொருள்: அல்லாஹ் தூயவன் அவனின் புகழைக் கொண்டு (அவனை நான் துதிக்கின்றேன்).
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை
‘சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி‘
(அல்லாஹ் தூயவன் எனப் போற்றிப் புகழ்கிறேன்)
என்று சொல்கிறாரோ அவர் கொண்டுவந்த (நல்லறத்)தைவிடச் சிறந்ததை வேறெவரும் மறுமைநாளில் கொண்டு வருவதில்லை; அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். முஸ்லிம் 5222

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**ஒரு நாளைக்கு 100 முறை:**

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهِ

**“ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி”**

பொருள்: அல்லாஹ் தூயவன் அவனின் புகழைக் கொண்டு (அவனை நான் துதிக்கின்றேன்).

“இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்’
’சுப்ஹானல்லாஹ் வபிஹம்திஹி’
(அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்)
என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ
அவரின் தவறுகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன.
அவை கடலின் நுரை போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே!

என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.”(புஹாரி 6405)

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**காலையில் 03 முறை:**

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ
وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ

**“ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, அதத கல்கிஹி, வரிழா நஃப்ஸிஹி, வஸினத அர்ஷிஹி, வமிதாத கலிமாதிஹி”**

பொருள்: “அல்லாஹ் தூயவன், அவனுடைய புகழைக் கொண்டும், அவனுடைய படைப்பினங்களின் எண்ணிக்கை அளவிற்கும், அவனுடைய பொருத்தத்தின் அளவிற்கும், அவனது அர்ஷின் எடையளவுக்கும் அவனுடைய வார்த்தைகள் எழுதப்பட்ட மையின் அளவிற்கும் (அவனை நான் துதிக்கின்றேன்).

நபி (ஸல்) அவர்களின் துணைவியார் ஜுவைரியா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப் பின் அதிகாலையில் என்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள்.

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள். முஸ்லிம் 5272).

# காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

## காலையில் 03 முறை:

அப்போது நான் எனது தொழுமிடத்தில் அமர்ந்திருந்தேன். பிறகு அவர்கள் முற்பகல் தொழுகை (ளுஹா) தொழுதுவிட்டு வந்தார்கள். அப்போதும் நான் (அதே இடத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது என்னிடம், 'நான் உன்னிடமிருந்து சென்றது முதல் இதே நிலையில்தான் நீ இருந்துகொண்டிருக்கிறாயா? ' என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்றேன். நபி (ஸல்) அவர்கள், 'நான் உன்னிடமிருந்து சென்றதற்குப் பிறகு நான்கு (துதிச்) சொற்களை மூன்று முறை சொன்னேன். அவற்றை இன்றைக்கெல்லாம் நீ சொன்னவற்றுடன் மதிப்பிட்டால், நீ சொன்னவற்றை அவை மிகைத்துவிடும். (அவை:) சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி அதத கல்கிஹி, வரிளா நஃப்சிஹி, வ ஸினத்த அர்ஷிஹி, வ மிதாத கலிமாத்திஹி (ஆகியவையாகும்)' என்றார்கள்.

(பொருள்: அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவன் உவக்கும் அளவுக்கும், அவனது அரியணையின் எடையளவுக்கும், அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்கும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனைத் தூயவன் எனத் துதிக்கிறேன்.)

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள். முஸ்லிம் 5272).

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

## காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**ஒரு நாளைக்கு 70 தடவைக்கும் அதிகமாக:**

أَسْتَغْفِرُ اللَّهَ وَأَتُوبُ إِلَيْهِ

**'அஸ்தஃக்ஃபிருல்லாஹ வ அதூபு இலைஹி'**

(பொருள்: நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கமே திரும்புகிறேன்.)

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: "அல்லாஹ்வின் மீதாணையாக! நான் ஒருநாளில் எழுபது தடவைக்குமேல் 'அஸ்தஃக்ஃபிருல்லாஹ வ அதூபு இலைஹி' என்று கூறுகிறேன் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன்.

(புஹாரி 6307).

அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# காலையிலும், மாலையிலும் ஓத வேண்டிய பிரார்த்தனைகள்:

**ஒரு நாளைக்கு 100 முறை:**

أَسْتَغْفِرُ اللَّهَ

**“அஸ்தஃக்ஃபிருல்லாஹ்”**

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உள்ளத்தின் மீதும் திரையிடப்படுகிறது. நான் ஒவ்வொரு நாளும் நூறு முறை அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

இதை அஃகர்ரு பின் யசார் அல்முஸனீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் 5234)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். ஏனெனில், நான் ஒவ்வொரு நாளும் அவனிடம் நூறுமுறை பாவமன்னிப்புக் கோருகிறேன்.

இதை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் 5235).

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

தொகுப்பாளர் : அஷ்ஷைக் அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு